முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்
அசல் வழக்கு எண். 240/2016

இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 02 ம் நாள் இன்று இந்த பி.வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நித்தியானந்தம் | தொழில் | : டிரைவர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : சுப்பிரமணியம் | கிராமம் | : இடுவம்பாளையம் |
| வயது | : 35 | தாலூக்கா | : பல்லடம் |
| நாள் | : 02-04-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வாதி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கில் வாதி கிரயம் பெற்றதாக சொல்லும் 75 செண்ட் பொறுத்து நான் இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரய ஆவணம் என் தகப்பனார் சுப்பிரமணி மற்றும் அவருடைய தாயார் எழுதிக் கொடுத்தது அதை நான் ஏற்றுக் கொள்கிறேனா என்றால் ஏற்றுக் கொள்கிறேன். தாவா சர்வே எண் பூமியின் மொத்த விஸ்தீரணம் என்ன என்றால் 3.98 ஏக்கர் உள்ளது. அதில் 68 செண்ட் ஒரு அயிட்டமாகவும், 10 செண்ட் ஒரு அயிட்டமாகவும் வாதி கிரயம் பெற்றார் என்றால் சரிதான்.

2. 3.98 ஏக்கரில் வடகோட்டில் சுமார் 1 ஏக்கர் பாறை குழி சுமார் 100 அடி ஆழத்தில் என்றால் சரிதான். கிரயம் கொடுத்ததாக சொல்லும் பூமியில் பாறை குழி உள்ளது என்றால் சரிதான். கிரயம் பெற்ற பிறகு தான் வாதி மண்ணை கொட்டி சமப்படுத்தினார் என்றால் சரிதான். பூமி முழுவதும் வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டு அது விற்பனை செய்யப்பட்டு விட்டது என்றால் சரிதான். வாதிக்கு கிரயம் கொடுத்த 10 செண்ட்க்கு அருகில் எங்களுக்கு எந்த இடமும் இல்லை என்றால் சரியல்ல. அந்த காலியிடம் குறித்து செக்குபந்தியில் கண்ணம்மாள் விட்டுள்ள வண்டித்தடத்துக்கும் கிழக்கு என கண்டுள்ளது என்றால் சரிதான். பாறை குழிக்கு அருகில் வேறு இடம் உள்ளது.

3. அ.வ.எண்.177/2015 வழக்கை இவ்வழக்கின் வாதிகளுக்கு எதிராக தாக்ல செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கை பொறுத்து என் தகப்பனார் தான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். நான் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் தந்தை தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் வாதிகளின் அனுபவத்தை உறுதி செய்து தான் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.04.02 16:52:03 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.